பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 29 (14—11—68) வியாழன் ★ வெளியூர் : ஐப்பசி 30 (15—11—68) வெள்ளி [இதழ் : 124

## காவிரி நீர்த் திட்டம்

### நிபுணர்கள் வருகின்றனர்

சென்னை, நவ. 14—

சென்னை நகருக்குக் காவிரி நீர் கொண்டுவருவதுபற்றிய தமிழக அரசின் திட்டம்பற்றி மேலும் விரிவாக ஆராய்ச்சி நடத்த மத்திய நீர் -- மின்சாரக் கழகத்தின் ஐந்து நிபுணர்கள், சனவரியில் இங்கு வருவார்கள்.

காவிரி நீர்த் திட்டம், திட்டக் குழுவின் ஒப்புதல் பெற்றுவிட்டது தெரிந்ததே. நடைமுறையில் எழக்கூடிய சிக்கல்கள் பற்றி ஆராய்ச்சி நடத்தும்படி திட்டக் குழு கேட்டுக்கொண்டதன்பேரில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

# இந்தித் தந்திக்கு நேர்ந்த கதி!

## இந்திவாலாக்களுக்கு சஞ்சீவியார் சூடு!

### 'நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தில் பேச உரிமையுண்டு'

#### 'இந்தியில் பேசக் கட்டாயப்படுத்த முடியாது' என அறிவிப்பு

புதுடில்லி, நவ. 13—

இன்று நாடாளுமன்ற மக்களவையில் இந்திவாலாக்களுக்குச் சரியான சூடு கொடுத்தார் அவைத் தலைவர் சஞ்சீவியார்!

பாதுகாப்புத்துறைத் தொடர்பான விவாதம் நடந்துகொண்டிருந்தபோது, சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களின் இந்தி வெறியைக் காட்டிக் கொண்டனர்!

அப்போது அவைத் தலைவர், 'பேசப்படும் பிரச்சினை மொழிப் பிரச்சினையைவிட முக்கியமானது' என்று சூடாகச் சொன்னார்.

"இந்தியில் கேட்ட கேள்விக்கு இந்தியிலேயே விடையளிக்க வேண்டும்" என்று ச. சோ. கட்சியினர் விதண்டாவாதம் புரிந்தனர்.

"இத்தகைய செயல் இந்தி மொழி வளரத் துணைசெய்யாது" என்றார் பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங்.

திரு. சுவரண் சிங் ஆங்கிலத்தில் பதில் சொல்லத் துவங்கியதும், 'இந்தியில் பதிலளிக்க வேண்டும்", என்று, இந்தியில் கேள்வி கேட்ட சிவசரண் லால் என்பவரும், மற்றும் சிலரும் கூச்சல் எழுப்பினர்.

உடனே அவர், 'நான் எந்த மொழியில் பதில் கூறுவது என்பதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை எனக்கு உண்டு' என்றார்.

அதைக் கேட்டு மீண்டும் இந்தி வெறியர்கள் கூச்சலிட்டனர்.

அந்த நேரத்தில்தான் அவைத் தலைவர் தலையிட்டு, 'யாரையும் இந்தியில் பேசுமாறு நான் கட்டாயப்படுத்த முடியாது; ஆங்கிலம் அல்லது இந்தியைப் பயன்படுத்த உறுப்பினர்கட்கு உரிமையுண்டு' என்றார்.

"அவசியமில்லாமல் மொழிப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம்" என்று அவர் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

பிறகு அமைச்சர் ஆங்கிலத்திலேயே பதிலளித்தார்.

## சென்னையில் பிரிட்டிஷ் தூதுவர்

### அண்ணாவைச் சந்தித்தார்

சென்னை, நவ. 14—

தமிழகத்திற்கு வருகை தந்துள்ள பிரிட்டிஷ் நாட்டின் இந்தியத் தூதுவர் சர். மோரிஸ் ஜேம்ஸ் இன்று நுங்கம்பாக்கத்தில் அண்ணாவைச் சந்தித்தார்.

அவர், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் சந்தித்தார்; அதுபோது அமைச்சர், தூதுவருக்குத் திருக்குறள் ஒன்றினை அன்பளிப்பாக வழங்கினார்.

இன்று தூதுவருக்கு தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், விருந்தொன்று அளித்தார்; இந்த விருந்து கன்னிமாரா ஓட்டலில் நடைபெற்றது.

விருந்தில், தமிழக அமைச்சர்கள், பிரிட்டிஷ் தூதுவர் அலுவலக அதிகாரிகள், தலைமைச் செயலாளர்கள் முதலியோர் கலந்துகொண்டனர்.

பின்னர், கோட்டைக்குச்சென்று தலைமைச் செயலர் இராமகிருஷ்ணனையும் தூதுவர் சந்தித்தார்.

## ஆந்திரத்தில் சீந்துவாரில்லை!

ஐதராபாத், நவ. 13—

'இந்தியில் தந்தி அனுப்பும் முயற்சி ஆந்திரத்தில் தோல்வியடைந்துவிட்டது!

"'தேவநாகிரி எழுத்துக்களில் இந்தியில் தந்தி அனுப்பலாம்' என்று அறிவிக்கப்பட்டிருந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்வதில் ஆந்திர மக்கள் சிறிதும் அக்கறை காட்டவில்லை!

"ஆந்திரத்தில் இந்தியில் தந்தி கொடுப்பவர்கள் சராசரியாக நாளொன்றுக்கு மூன்று பேர்களேயாவர்; அதேபோல், இந்தியில் வரும் தந்திகளைப் பெறுபவர்கள் சராசரி நான்கு பேர்களேயாவர்.

"ஐதராபாத்தில் சராசரியாக ஒரு நாளைக்கு இந்தியில் அனுப்பும் தந்திகள் 4 --- வரும் தந்திகள் 10; செகந்தராபாத்தில் இந்த எண்ணிக்கை முறையே 6; 4."

மேற்கண்ட தகவல்களை ஆந்திர அஞ்சல் துறைத் தலைமை அதிகாரி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று --- நான்கு தந்திகளைக் கொடுப்பவர்களும் பெறுபவர்களும்கூட ஆந்திரர்களாக இருக்க முடியாது; ஆந்திரத்தில் வசித்துவரும் இந்திக்காரர்களாகவே இருக்கக்கூடும்!

## சேரிகளைச் சீரமைக்கப் புரட்சிகரமான திட்டங்கள்!

### ஏழை மக்களை வாழவைக்கத் தமிழக அரசின் முயற்சி

### பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்கவல்லது அறிஞர் அண்ணாவின் தலைமை

#### நகர வாக்காளரிடையே அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

சென்னை, நவ. 14—

"சென்னையிலுள்ள மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் சேரிகளில் வாழ்கின்றனர். அந்தச் சேரிகளை ஒழித்துவிட்டு, சேரிவாழ் மக்களுக்கு நல்ல குடியிருப்பும், புதுவாழ்வும் செய்து தரவேண்டியது அவசியமாகும்.

"இங்குள்ள பல சேரிப் பகுதிகள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருப்பதால், விளக்கு வசதிகளைக்கூடச் செய்துதர இயலவில்லை.

"தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தருவதற்குச் சேரி நிலங்களை அரசுக்கு விற்றுவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்; தனிப்பட்டவர்கள் தாங்களாகவே முன்வந்து அதுபோன்ற நிலங்களைத் தராவிடில் அரசு வெறுமனே இருக்க இயலாது.

"சேரிகளைச் சீரமைக்கப் புரட்சிகரமான திட்டங்களைத் தமிழக அரசு தயாரித்து வருகிறது. மக்களின் நன்மையைக் கருதி, சட்டத்தின் மூலம் சேரி நிலங்களை ஏற்றுக்கொள்வதற்கு அரசு பரிசீலனை செய்துவருகிறது.

"சனநாயகம் நிலவும் இந்தக் காலத்தில், இன்னும் பலர் ஏழடுக்கு மாளிகைகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் --- பலர் சேரிகளில் வாழ்கிறார்கள். இதையெல்லாம் மாற்றியமைக்கும் பொறுப்பு நம்மிடம் இருக்கிறது.

"ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க --- தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரம் காண --- தி.மு.க. ஆட்சிக்கு மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுகிறேன்"

என்று அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சென்னை 77-வது வட்டத்தில் வெற்றி பெற்ற மாநகராட்சி உறுப்பினர் ஏ. கி. புகழேந்தி அவர்களின் பாராட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கிக் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :---

"இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது; டெல்லியில் நாளொன்றுக்கு ஓர் ஆளுக்கு 100 காலன் தண்ணீர் கிடைக்கிறது; பம்பாயில் 80 காலன் தண்ணீர் கிடைக்கிறது; ஆனால் சென்னையில்தான் 10 காலன் தண்ணீர்கூடக் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

"இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் சக்தி மத்திய அரசிடம்தான் இருக்கிறது; எவ்வளவு கேட்டுக்கொண்டும் நமக்கு அது உதவுவதாக இல்லை; எனவே, மத்திய அரசை நோக்கி நாம் போர்க்குரல் எழுப்பவேண்டும்.

### கடமை என்ன?

"அண்ணா அவர்கள் தலைமையில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு நாம் பரிகாரம் தேட வேண்டியிருக்கிறது.

"வாக்காளர்கள் தங்கள் கடமையைச் செய்துவிட்டனர்; அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான், நகரத்திற்கு -- அவர்களின் வட்டத்திற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

"ஒரு கட்சி, மக்கள் தொடர்பில் ஒரு சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக இருக்கவேண்டும்; அப்படியிருக்கும் கட்சியை எவரும் அசைக்க இயலாது"

என்று லெனின் எழுதியுள்ள வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன. அவர் எழுதியுள்ள கருத்தைப் பின்பற்றித் தி. மு. கழகம் சென்றுகொண்டிருக்கிறது; இதை எவரும் உணரவேண்டும்."

## உலகிலேயே சக்திவாய்ந்த உருப் பெருக்காடி!

உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த உருப் பெருக்காடி (எலெக்டிரானிக் மைக்ராஸ்கோப்) கருவியை, ஜெர்மன் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

'எல்மிஸ்காப் -- 101' என்ற இந்த அதிசயக் கருவி, எந்த ஒரு பொருளையும் 25-இலட்சம் மடங்கு பெருக்கிக் காட்டக்கூடிய சக்திவாய்ந்ததாகும்; அதாவது சாதாரண மனித உரோமத்தை இந்த 'மைக்ராஸ்கோம்' கருவியின்கீழ் வைத்துப் பார்த்தால் 5 கிலோ மீட்டர் அகலம் உள்ளதாக இருக்கும்.

## புதிய மேயருக்கு இராஜாஜி வாழ்த்து

### ம. பொ. சி. --- காயிதே மில்லத் வாழ்த்துக்களையும் பெற்றார்

சென்னை, நவ. 13—

மேயர் வேலூர் நாராயணன், இன்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் வீட்டிற்குச் சென்று அவருக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினார்.

"சிறந்த முறையில் சென்னை நகர மக்களுக்குச் சேவை செய்யுங்கள்" என்று அறிவுரை கூறி அவரை வாழ்த்தினார் இராஜாஜி.

பின்னர், முஸ்லீம் லீக் கட்சித் தலைவரான காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்களையும், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களையும், மற்றும் தமிழக அமைச்சர்களையும் சந்தித்து மரியாதை செலுத்தினார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.
திருவள்ளுவராண்டு 1999 ஐப்பசி 29 (14—11—68) வியாழன்

# புதிய மேயர்

வேலூர் நாராயணன் அவர்கள், சென்னை மாநகரத்தின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

துணை மேயராக நண்பர் கே. கோவிந்தசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

மாநகராட்சி மன்ற நிர்வாகத்தை, மாநகர மக்கள் நம்முடைய கழகத்திடம் ஒப்படைத்த நாள் முதற்கொண்டு, இரண்டொருவர் நீங்கலாக கழகத்தைச் சேர்ந்தவர்களே மேயர்களாகவும், துணை மேயர்களாகவும் தொடர்ந்து இருந்துவந்துள்ளனர்.

கழகத்தின் முதல் மேயராக அ. பொ. அரசு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில், அரசியல் துறையில் கிளம்பிய பரபரப்பு, மற்ற மேயர்களைத் தேர்ந்தெடுத்த நேரங்களில் காணப்படவே இல்லை.

மாநகராட்சி மன்ற நிகழ்ச்சியில் ஆண்டுக்கொரு முறை நடைபெற வேண்டிய சர்வசாதாரண நிகழ்ச்சியாகவே, மேயர் தேர்தல்கள் மதிக்கப்பட்டு வந்துள்ளன.

ஆனால், இம்முறை நடைபெற்ற தேர்தல், பல வகையில், மாநகர மக்களின் கருத்தை ஈர்க்கத்தக்க நிகழ்ச்சியாக இருந்திருக்கிறது. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியதாக இருந்து வருவது, அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தலில், பெரும்பான்மை இடத்தைக் கழகம் பெறத் தவறிவிட்டதே ஆகும்.

கழகத்தைச் சேர்ந்த மன்ற உறுப்பினர்களுக்குள்ளாகப் பதவிப் போட்டி ஏற்பட வேண்டும் -- அதன் பலனாக கழகத்திற்குள்ளேயே அதிருப்தி தோன்ற வேண்டும் -- அந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு கழகத்துக்கு வீழ்ச்சியை உண்டாக்கலாம் --- எனக் காங்கிரசுக் கட்சியின் மேலிடம் கனவு கண்டுகொண்டிருந்தது. அது வெறும் பகற்கனவுதான் என்பதை, கழக உறுப்பினர்களும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஒத்த கருத்தினர்களாக இருந்து, கழகத்தைச் சேர்ந்த வேலூர் நாராயணன் அவர்களையும், கோவிந்தசாமி அவர்களையும் முறையே மேயராகவும், துணை மேயராகவும் தேர்வு செய்திருப்பதன் மூலம் மெய்ப்பித்துள்ளனர்.

புதிய மேயரையும் துணை மேயரையும் தேர்வு செய்வதில், இப்பொழுது கழகம்—தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த மன்ற உறுப்பினர்களிடம் இடம் பெற்றுள்ள ஒத்த மனமும் ஒற்றுமை உணர்வும், அடுத்துவரும் தேர்தல் வரை நீடித்து இருந்திட வேண்டும். இந்த ஒற்றுமை உணர்வுக்கு ஊறு ஏற்படாது என்பதுடன், மேலும் வலிவும் பெறும் என்பது உறுதியிலும் உறுதி.

இதற்கு முன்னர் மேயர்களாக இருந்தவர்களுக்கு, கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்பலமாக இருந்து வந்திருக்கிறது. எதிர்க் கட்சியான காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தால், அவர்களும் கூடுமான வரை கழக மேயர்களுடன் இணக்கமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றனர்.

ஆனால், இன்றைய நிலை அதுவல்ல; எதிர்க் கட்சியாக இருக்கின்ற காங்கிரசுக் கட்சியினரும் ஏறத்தாழ சம பலத்துடன் இருக்கின்றனர். எனவே, எண்ணிக்கை கூடுதலாக இருப்பதால், இயல்பாக எழக்கூடிய தெம்பு, முன்பு செயல்பட்டுவந்ததைவிட காங்கிரசுக் கட்சியினரை சிறிதளவு கூடுதலான மிடுக்குடன் செயல்படத் தூண்டும்.

எண்ணிக்கையில் குறைவாக இருந்துவந்த நேரத்திலும்கூட, சிறந்த எதிர்க் கட்சியினர் எனத் தயங்காமல் பாராட்டத்தக்கவகையில் காங்கிரசுக் கட்சியினர் செயல்படவில்லை. அப்பொழுது இருந்ததைவிட இப்பொழுது கூடுதலான எண்ணிக்கையிலிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர், முன்னர் செயல்பட்டுவந்திருப்பதை மறந்து, எந்த அளவுக்கு இணக்கமாக எதிர்க் கட்சி செயல்பட வேண்டுமோ அந்த அளவுக்கு இணக்கமாக, இத்தருணத்தில் செயல்படக்கூடும் என எதிர்பார்க்க முடியாது. முன்னைவிடக் கொஞ்சம் குரலை உயர்த்தி, காரசாரமாகத்தான் இப்பொழுது பேசுவர்.

காங்கிரசுக் கட்சியினர் குரலை உயர்த்திப் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கின்ற கழகத்தவர்களும், தோழமைக் கட்சியினரும் சிறிதளவு ஆத்திரத்துக்கு ஆளாவது எதிர்பார்க்கக் கூடியதே. இவர்களும் காங்கிரசுக் கட்சியினரைப் போன்றே செயல்பட முனையும்பட்சத்தில், மன்றத்தின் ஒழுங்குக்கும் சிறப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் களங்கம் நேர்ந்திடக்கூடும்.

இப்படி மன்றத்தின் ஒழுங்கும் கட்டுப்பாடும் குலையாமல் பாதுகாத்து -- கண்ணியத்தைக் காப்பாற்றி, மன்றக் கூட்டங்களைச் சிறப்பான முறையில் நடத்திவருவதற்கு, கூட்டத்தில் தலைமை ஏற்றுள்ளவருக்குத் தனித் திறமையும், பேராற்றலும் இருந்திடவேண்டியது கட்டாயமாகும். அத்தகு தனித் திறமையும் சிறந்த ஆற்றலும் பெற்றிருக்கின்றவர்தான் நண்பர் வேலூர் நாராயணன் அவர்கள்.

வேலூர் நாராயணன் அவர்களைச் சுட்டிக்காட்டி, 'இவர்தான் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரத்தின் முதற் குடிமகன்' எனப் பெருமிதத்துடன் -- அரசியல் கட்சி வேற்றுமைகளை மறந்து -- நாம் அனைவருமே பெருமிதத்துடன் கூறிக்கொள்ளலாம். அதற்குத் வேவைப்படக்கூடிய பண்பும் படிப்பும், சொல்லாற்றலும், பழகுகின்ற நற்பயிற்சியும் பெற்றிருக்கின்றவர் நண்பர் வேலூர் நாராயணன்.

சென்னை மாநகர வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்திடக்கூடிய வகையில் -- 'மேயர்' என்ற முறையில் -- வேலூர் நாராயணன் அவர்கள் செயற்கரிய பணிகளைச் செய்திடல் வேண்டும். 'செய்திடுவார்' என்ற நம்பிக்கை நமக்குண்டு. 'நண்பருடைய பணி சிறப்படைய வேண்டும் -- அவருடைய நிர்வாகம் வெற்றி பெறவேண்டும்' என வாழ்த்துகின்றோம்.

துணை மேயராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற நண்பர் **கோவிந்தசாமி** அவர்கள், அடக்கமே உருவானவர். தன்னடக்கம் என்பதற்குரிய பொருளை, கோவிந்தசாமி அவர்களை ஒருமுறை பார்த்தாலே சராசரி அறிவு பெற்றுள்ளவர்களாலும் புரிந்துகொள்ள முடியும். மணம் வீசும் மலருக்குக் கண்ணைக் கவரக்கூடிய வண்ணத்தைச் சேர்த்ததுபோல். புதிய மேயருக்கு இன்றைய துணை மேயர் அமைந்திருக்கின்றார். அவருக்கு நமது பாராட்டு.

—கா. க.

# அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த சாதனம் சினிமா!

## மன நிலையைப் பொறுத்தே அதன் பயனும் உள்ளது

## படம் எடுப்பவரும் பார்ப்பவரும் நல்லொழுக்கம் வளரத் துணை நிற்க வேண்டும்

### 'பைலட்' திரை அரங்குத் திறப்பு விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, நவ. 13—

"சினிமாவைப்போல் கல்வியறிவை வளர்க்கக்கூடிய சிறந்த சாதனம் இன்று வேறொன்று இல்லை; சினிமாவினால் சில தீமைகள் ஏற்படுகின்றன என்பதால், 'சினிமாவே கூடாது --- அதைப் பார்ப்பதே ஆகாது' என்று கூறுவது சரியல்ல; தீமை பயக்காத --- சிறந்த நல்லொழுக்கங்களைக் கற்பிக்கின்ற திரைப் படங்களும் உண்டு"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள்' சென்னையில் 'பைலட்' என்னும் புதிய திரைப் பட அரங்கைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இராயப்பேட்டை நெடுஞ்சாலையில் கட்டப்பட்டுள்ள இத்திரைப் பட அரங்கின் திறப்பு விழா, நவ. 11-ல், சென்னை ஆர்ச் பிஷப் திரு. அருளப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரைப் பட அரங்கின் உரிமையாளர்களான திரு பி. ஏ. சஞ்சீவி தம்பதிகள் அனைவரையும் வரவேற்றனர்.

அமைச்சர் திரையரங்கைத் திறந்துவைத்ததும், எல்லோருக்கும் 'லார்டு ஜிம்' என்ற ஆங்கிலப் படம் திரையிட்டுக் காட்டப்பட்டது

இருபத்தைந்து இலட்ச ரூபாய்ச் செலவில் புத்தம்புதிய முறையிலும் வசதிகள் மிக்கதாயும் அமைக்கப்பட்டிருக்கும் இந்தத் திரையரங்கு 70 எம்.எம். அளவுள்ள படத்தைத் திரையிடும் வகையில் மிக அகன்ற திரையுடன் விளங்குகிறது. விரைவில் இதே அரங்கில், 'சினிரமா' படம் காட்டுவதற்கும் வசதி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'சினிரமா' படம் காட்டும் திரைப் பட அரங்கு இதுவரை சென்னையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"சினிமா என்பது ஒரு கத்தியைப் போன்றது. கத்தியை ஒருவர் பழத்தை அரிந்து மற்றவர்கட்கு வழங்கும் நல்ல காரியத்துக்கும் பயன்படுத்தலாம்; அதே கத்தியை மற்றவரைக் குத்திக் கொலை செய்யவும் பயன்படுத்தலாம்.

அதேபோல், சினிமாவும் நல்ல காரியத்துக்கும் பயன்படும் -- தீமைக்கும் பயன்படலாம். பயன்படுத்துபவரின் உள்ளத்தைப் பொறுத்துத்தான் பயன் அமையும்.

வள்ளுவர் சொன்னதைப்போல், 'செய்யத்தக்கன இவை -- செய்யத் தகாதன இவை' என்று அறிந்து, செய்யத்தக்கவிதத்தில் திரைப் படங்களை உருவாக்குவார்களானால், நாட்டிற்கு நற்பயன் விளையும்.

### முப்புலன்களை ஈர்ப்பது!

மனிதனின் கண் -- செவி -- சிந்தனை ஆகிய மூன்று புலன்களையும் ஈர்க்கக்கூடிய சக்தி, சினிமா -- நாடகம் போன்ற காட்சிகளுக்குத்தான் உண்டு.

ஏட்டிலே எழுதியுள்ளதைப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை நம் நாட்டில் குறைவு; படிக்கத் தெரிந்தாலும் அதைப் புரிந்துகொள்ளக்கூடியவர்கள் அதைவிடக் குறைவு; புரிந்துகொண்டாலும், மனதில் தங்கவைத்துக் கொள்பவர்கள் அதைவிடக் குறைவு; ஆனால், கண்ணால் பார்க்கும் காட்சி அத்தனைப் பேருடைய உள்ளத்திலும் நன்கு பதியும் -- நிலைத்து நிற்கும்.

சிந்தை களிக்கவும் சிந்தனையைத் தூண்டவும், சினிமாவும் நாடகமும் பயன்படுகின்றன!

ஆகவே, இத்தகைய நல்ல காரியத்தில் ஏராளமான பொருட்செலவில் இந்த அரங்கை அமைத்து -- இதில் பார்க்க வருபவர்களின் வசதியை முக்கியமாகக் கவனித்து -- எல்லா வகையிலும் எல்லாத் திரைப் பட அரங்குகளுக்கும் முன்மாதிரியாக இருக்கும்வகையில் வசதிகளை அமைத்து -- மிக எடுப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் உருவாக்கியுள்ள உரிமையாளர் திரு. சஞ்சீவி அவர்களைப் பாராட்டுகிறேன்; அவருடைய முயற்சி வெல்க என வாழ்த்துகிறேன்.

### ஏழைகட்கும் இன்பந்தரும் வசதி

இருபத்தைந்து இலட்சம் ரூபாய்ச் செலவிட்டுக் கட்டிய கொட்டகையில் ஓடும் படம், மூவாயிரம் ரூபாய்ச் செலவில் கட்டிய கொட்டகையிலும் ஓடும்; இருபத்தைந்து இலட்சம் ரூபாய்ச் செலவு செய்துதான் ஆக வேண்டும் என்பதில்லை; என்றாலும், பொருட் செலவைப் பொருட்படுத்தாமல் பெருஞ் செலவில் -- மிக நல்லமுறையில் அமைத்திருக்கிறார்கள் இந்த அரங்கை!

ஏழை மக்களில் எத்தனைப் பேர் இத்தகைய வசதிகளை அனுபவித்திருக்க முடியும்? பணக்காரர்கள் மட்டுமே அனுபவிக்கக்கூடிய வசதிகளை, ரூ 1.50 கொடுத்தால் இந்த அரங்கில் ஏழை மக்கள் அனுபவிக்கலாம். ஏர்கண்டிஷன் செய்யப்பட்டு, மெத்தையுடன்கூடிய நாற்காலியில் அமர்ந்து மூன்று மணி நேரம் உல்லாசமாகப் படம் பார்க்கும் வாய்ப்பு ஏழைகட்கும் கிட்டும் வகையில், பரந்த உள்ளத்துடன் இந்தக் கொட்டகையை அமைத்திருப்பது பாராட்டுக்குரியது.

திரைப்பட அரங்குகளுக்கு மதிப்பு அதிகம் என்றால், அதில் ஓடும் படங்களுக்கும் மதிப்பு உயருகிறது. ஒரு படம் மிக நல்ல படமாக இருந்தாலும், அது மிக மோசமான கொட்டகையில் ஓடினால், அந்தப் படமும் மட்டமானதாகத்தான் இருக்கும் என்று கருதுகிற மனப்பான்மை மக்களிடையே உள்ளது.

மட்டமான படமானாலும், அது ஓடுகின்ற கொட்டகையைப் பொறுத்து அதற்கேற்ப அதன் சிறப்பும் உயருகிறது.

### மாநகரின் மதிப்பு உயரும்

இத்தகைய திரையரங்குகளின் எண்ணிக்கை உயருவதனால், சென்னை நகரின் மதிப்பும் உயருகிறது.

ஒரு நகரத்தை இப்பொழுதெல்லாம் மதிப்பிடுவதென்றால், அந்த நகரில் எத்தனைத் திரைப் பட அரங்குகள் இருக்கின்றன என்று பார்த்து மதிப்பிடுபவர்களும் இருக்கிறார்கள்.

மக்களின் பொருளாதார நிலையையும், பொழுதுபோக்கும் மனப்பான்மையையும் கணக்கிட வேண்டுமானால், திரைப்பட அரங்கின் முன் நிற்கும் மக்கள் வரிசை (கியூ)வைப் பார்த்தால் போதும்.

அந்த வகையில், இந்த நகரத்துக்கு மேலும் சிறப்புத் தேடித் தந்துள்ளது இந்தத் திரைப்பட அரங்கு என்பதாலும், கல்வியறிவை வளர்க்கக்கூடியது திரைப்படம் என்பதாலும், 'கல்வியமைச்சர்' என்ற முறையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### எது ஆபாசம்?

'திரைப்படத்தில் ஆபாசம் கூடாது' என்றால், 'எது ஆபாசம்?' என்று கேட்கிறார்கள்.

அகராதியை எடுத்து வைத்துக் கொண்டு பார்த்தால், 'இன்னின்னவை ஆபாசம்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்காது.

'இன்னின்னவை ஆபாசம்' என்று சொன்னால், 'அவையெல்லாம் கோயில் சிலைகளில் இல்லையா' என்றெல்லாம் கேட்கிற அளவுக்கு இன்றைய நிலைமை உள்ளது.

இன்னும் சிலர், 'இப்படியெல்லாம் படம் எடுத்தால்தான் படம் ஓடும் -- போட்ட பணத்தை எடுக்கலாம்; இல்லையேல், எடுத்த படம் பெட்டிக்குள் தூங்குவதுதான் மிச்சமாகும்' என்கிறார்கள்.

'மக்களின் மன நிலையையொட்டித்தான் படம் எடுக்கப்படுகிறது' என்கிறார்கள்.

ஆகவே, மக்களால் சினிமாப் படம் கெடுகிறது -- சினிமாவால் மக்கள் கெடுகிறார்கள்; இந்த நிலை மாறவேண்டும்.

சினிமாவில் ஆபாசம் என்று கருதப்படும் காட்சி, ஒரு சில வினாடிகளில் மறைந்துவிடக் கூடியவை; பார்த்தது மனத்தில் நிற்காமல் உடன் மறைந்துவிடவும் கூடும்.

ஆனால் அதே காட்சியை பெரிய படமாக எழுதி மவுண்ட்ரோடில் வைத்திருந்தால், அதைப் பலர் பார்த்துக்கொண்டே நிற்பதைப் பார்க்கிறோம்! பல நாட்கள் -- பல மாதங்கள் அதே படம்

(3-ம் பக்கம் பார்க்க)

# அரசியலைக் கெடுத்தது காங்கிரசுதான்!

## கழக ஆட்சியிலேயே மக்களுக்கு நன்மை கிடைக்கும்

சென்னை, நவ. 14—

"தேர்தலில் வெற்றியும் தோல்வியும் இயற்கைதான்; வெற்றி பெற்றவர்கள், மக்கள் ஆதரவு பெற்றவர்கள்--மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்கள்; அது இல்லாதவர்கள் இரண்டையும் இழந்தவர்கள், 'அப்படித்தான் கருதவேண்டும்; அதுதான் சனநாயக வாதிகளின் இலட்சணமாகும்.

"தோல்விபெற்றால், தோல்வி பெற்றவன் வெற்றி பெற்றவனைப்பார்த்து, 'அவன் பணம கொடுத்து வெற்றிபெற்று விட்டான்; மக்கள் புத்தியில்லாது ஓட்டுப் போட்டுவிட்டார்சள்' என்று சொல்லக்கூடாது; அது சனநாயகவாதிக்கு அழகல்ல!

"அந்தக் காலத்திலெல்லாம் மக்களுக்கு ஓட்டுக்காகக் காசு வாங்கத் தெரியாது. தேர்தலில் நிற்பதற்கே மக்கள் பின் வாங்குவார்கள்; ஆனால் அதெல்லாம் மாறி, 'காந்தி நின்றாலும் பொய்சொல்லாமல் இருக்க முடியாது; ஜவகர்லால் நின்றாலும் இலஞ்சம் கொடுக்காமல் இருக்க முடியாது' என்ற நிலையைக் காங்கிரசுக்காரர்கள் ஆக்கிவைத்து விட்டார்கள்!

"அரசியலிலே ஒழுக்கக்கேடு -- நாணயக்கேடு ஆகிய வற்றை உண்டாக்கியது காங்கிரசுக் கட்சிதான்!

"இன்றையத் தி. மு. கழக ஆட்சி நல்லபடியாகவே நடக்கிறது; இந்த ஆட்சியிலே நாமெல்லாம் நன்மையடைகிறோம்.

"காங்கிரசு ஆட்சி சாதியை ஒழிக்கவில்லை; முன்னேற்றக் கழக ஆட்சிதான் சாதியை ஒழிக்கவேண்டுமென்று கலப்பு மணச் சட்டத்தைக் கொண்டு வந்தது; ஏனென்றால், அவர்கள் சுயமரியாதையிலே ஊறிப் பிறந்தவர்கள்!

"காங்கிரசுக் கட்சி சமுதாயத்தைப்பற்றிக் கவலைப்படுகிற கட்சியல்ல! மக்களுக்கு அது நன்மை செய்யுமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும்! அப்படி யாராவது நினைத்தால், அவர்கள் பைத்தியக்காரர்கள் -- நான் தைரியமாக இதைச் சொல்லுவேன்!"

--பெரியார் ஈ.வெ.ரா.

(91-வது வட்டக் கூட்டத்தில்)

## டிராக்டர்கள் வாங்குவதற்குக் கடன்

வேலூர், நவ, 14—

"டிராக்டர்கள் வாங்குவதற்குக் கடன் கோரி மனுச் செய்வதற்கான காலவரம்பு செப். 30-ம் நாளிலிருந்து டிச. 31-ம் நாள்வரை நீடிக்கப்பட்டிருக்கிறது"

என்று வடாற்காடு மாவட்டக் கலெக்டர் பெல்லியப்பா நிருபர்களிடம் கூறினர்.

"ரூ. 37,000 பெறுமானமுள்ள நிலங்களும், அசையாச் சொத்துக்களும் இருப்பவர்களுக்கு இக்கடன் தரப்படும்; அவர்கள் டிச. 31-ம் நாளுக்குள் மாவட்ட விவசாய அதிகாரிக்கு மனுச் செய்யவேண்டும்; அவர் மாவட்டக் கலெக்டர்மூலம் அரசுக்குத் தமது சிபாரிசுகளை அனுப்புவார்" என்றும் கலெக்டர் கூறினர்.

# கரம்பக்குடியில் அமைச்சர் மதியழகன்

## காந்தி நினைவுப் பள்ளிகளைத் திறந்தார்

கரம்பக்குடி, நவ. 14—

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ. மதியழகன் அவர்கள், நவ. 10-ம் நாளன்று கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து ஒன்றிய நிர்வாகத்தில் கட்டப்பட்டுள்ள தீத்தானிப்பட்டி, பட்டி விடுதிப் பள்ளிக் கட்டிடங்களைத் திறந்துவைத்தார்.

காந்தி நூற்றாண்டுவிழா கொண்டாடும் இச்சமயத்தில் அண்ணலின் நினைவாக இப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு 'நினைவுப் பள்ளி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஆலங்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வி. சுப்பையா தலைமையில் அளிக்கப்பட்ட ஒன்றியக் குழு வரவேற்பில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர், ஒன்றியக் குழுவின் கோரிக்கைக்கிணங்க புதுக்கோட்டையைத் தலைமையாகக் கொண்டு புதுக்கோட்டைப் பகுதியை ஒரு தனி மாவட்டமாக்குவது அவசியம் எனவும், அதற்கு ஆவன செய்வதாகவும் கூறினர்.

ஒன்றியத் துணைத் தலைவரைக் க. முத்து வரவேற்றார்.

ஒன்றியத் தலைவர் துரை. விஜய ரெகுனாத பல்லவராயர் உருவப் படத்தை லால்குடி ஊராட்சி ஒன்றியத் தலைவர் அன்பில் தர்மலிங்கம் திறந்துவைத்து அவரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

மற்றும் ஒன்றியத் தலைவர் தலைமையில் காட்டாத்தி ஊராட்சியில் கொடுக்கப்பட்ட வரவேற்பில் அமைச்சர் கலந்துகொண்டு தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் உருவப் படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர்.

## புதுவை மாநில வாக்காளர் பட்டியல்

### கழகத் தோழர்கள் கவனிக்க:

"வருகிற பிப்ரவரித் திங்களில் நடைபெறும் புதுவை மாநிலச் சட்டமன்ற இடைக்காலத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் வேலையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

"அதனையொட்டி, வாக்காளர் பட்டியலில் விடுபட்டுப்போன வாக்காளர்களைச் சேர்க்கவும், தவறுகளைத் திருத்தவுமான பணிகளில் ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, புதுவை மாவட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் அறிவிக்கிறார்.

## வாக்காளர் பட்டியல் திருத்தம்

### உதகை ---- குன்னூர் தோழர்கள் கவனிக்க:

"உதகை நகராட்சி மன்ற வாக்காளர் பட்டியல்—உதகை நகர தி. மு. க. அலுவலகத்திலும்; குன்னூர் நகராட்சி மன்ற வாக்காளர் பட்டியல்—குன்னூர் நகர தி. மு. க. அலுவலகத்திலும் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

"பெயர்கள் விடப்பட்டுள்ளவர்கள், அந்தந்த நகராட்சி மன்ற வாக்காளர் பதிவு அதிகாரி (நகராட்சி ஆணையர்)களிடம் பெற்று, வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என, நீலகிரி மாவட்டத் தி. மு. க. செயலாளர் கே. பி. முருகேசன் அறிவிக்கிறார்.

# தமிழக முன்னேற்றத்தில் அண்ணாவின் அக்கறை

## காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினரின் பாராட்டுரை

### உருவப் படத்தைத் திறந்துவைத்து அமைச்சர் சாதிக்பாட்சா உரை

குடந்தை, நவ. 14—

குடந்தை நகராட்சிக்குச் சொந்தமான 'காமராசர் மாளிகை' எனப்படும் பயணிகள் விடுதியில், முதலமைச்சர் அண்ணா அவர்களின் உருவப் படத் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு நகராட்சித் தலைவரும், சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினருமான என். காசிராமன் தலைமை தாங்கினர்.

அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

**"அறிஞர் அண்ணா அவர்கள், மாற்றுக் கட்சிக் கருத்துக்களுக்கும் மதிப்புத் தரும் விழுமிய அரசியல் நாகரிகத்தை ஏற்படுத்தியுள்ளார்; கட்சி பற்றியதாயினும் சரி -- அரசு பற்றியதாயினும் சரி --- அறிஞர் அண்ணாவின் கருத்துக்கள், ஆழம் மிக்கவையாக இருக்கின்றன.'**

தலைமை தாங்கிய திரு. என். காசிராமன், அண்ணா அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாடு நலம் பெற வேண்டுமென்பதிலும், தமிழ் மக்கள் நன்கு வாழ வேண்டுமென்பதிலும், தமிழக மக்கள் கல்வி வசதி பெற வேண்டுமென்பதிலும், தமிழ்நாட்டில் உணவுப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதிலும் முதலமைச்சர் அண்ணா அவர்கட்கு ஆர்வமும் ஊக்கமும் மிகுந்திருக்கிறது.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே தலைசிறந்து முன்நிற்கச் செய்வதில் முதலமைச்சர் அவர்களுக்கிருக்கும் அக்கறையை அவருடன் பேசியபொழுது நான் கண்டறிந்தேன்.

பிறர் கூறும் கருத்துக்களை அக்கறையோடு கேட்டுக்கொள்வதிலும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதிலும் இணையற்று விளங்குகிறார் முதலமைச்சர். சட்டமன்றத்தில் பிறர் ஏதும் குறைகளை எடுத்துச் சொன்னால் கூட அது கண்டு அவர் கோபமடைவதில்லை; அது அவரிடமுள்ள மிகப் பெரும் குணமாகும்.

முதலமைச்சர் அவர்களுக்கு அறுபதாம் வயது தொடங்கி விட்டது. அவருடைய பழுத்த அனுபவங்கள், தமிழ் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் மிகவும் பயனளிக்கும்.

முதலமைச்சருக்கு நிரம்ப ஓய்வு தேவையானதால், அவருக்குக் குறைந்த அளவு வேலையையே மக்கள் கொடுக்க வேண்டும்."

விழாவில், குடந்தை நகராட்சி தி.மு.க. உறுப்பினர் பி. வி. செயராமனும் பேசினர்.

காங்கிரசு உறுப்பினர் சி. பி. இராமதாசு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:—

"அண்ணா அவர்கள் இளமை தொட்டுத் தமிழ் மக்கள் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றுவிட்டார்!

"அண்ணாவின் தலைமையில் தமிழ் நாடு புதிய எழுச்சி பெற்றிருக்கிறது."

அமைச்சரை வரவேற்று நகராட்சித் தலைவர் என். காசிராமன் எம்.எல் ஏ. பேசினர்.

கே. பி. தங்கவேல் நன்றி கூறினர்.

வி. சின்னத்தம்பி வாழ்த்துரை வழங்கினர்.

### தாய் - சேய் நல விடுதி விழா

குடந்தை நகராட்சியின் தாய் -- சேய் நல விடுதியில் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள வார்டை அமைச்சர் சாதிக் பாட்சா திறந்து வைத்தார்.

## மதுரையில் வெள்ளம்

### பாதிக்கப்பட்டோருக்கு உதவி

மதுரை, செல்லூர், முத்துராமலிங்க நகர், இதயராசபுரம், அகிம்சாபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பள்ளிக்கூடத்தில் தங்கியிருக்கும் 500 பேர்களுக்கு, மதுரை 3-வது வட்டார தி. மு. க. சார்பில், வட்டார அவைத் தலைவர் சே. அழகர்சாமி தலைமையிலும்-- வட்டாரச் செயலாளர் மு. வை இரத்தினம் முன்னிலையிலும் புரட்சி நடிகர் எம்.ஜி. ஆர். மன்ற அவைத் தலைவர் மு. ஆனந்தம் 9-11-68ல் உணவு வழங்கினர்.

# தொழிலாளருக்கு கடன் வசதி

## வைப்பு நிதியிலிருந்து தருவதற்குத் திட்டம்

வருங்கால வைப்பு நிதியில் (பிராவிடண்டு பண்டு) தொழிலாளர்கள் சேமித்து வைத்துள்ள பணத்திலிருந்து அவர்களுக்குக் கடன் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசுத் தொழிலாளர் நலத் துறை செயலாளர் பி. சி. மாத்யூ இந்தத் தகவலை வெளியிட்டார்.

சென்னை இராயப்பேட்டையில் வருங்கால வைப்பு நிதியின் வட்டார அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"வருங்கால வைப்பு நிதியின் டிரஸ்டிகள் போர்டு தற்போது ஒரு முக்கிய யோசனையை பரிசீலனை செய்து வருகிறது; அளவுக்கு மீறி அநியாய வட்டி -- கொடுத்த கடனைவிட அதிகமாக வட்டி வசூலித்துத் தொழிலாளர்களைச் சுரண்டுகிறவர்களிடமிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுவதே இந்த யோசனையின் நோக்கமாகும்.

நியாயமான வட்டி விகிதத்தில் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்குவதற்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதே இந்த யோசனையாகும். இவ்விதம் அளிக்கப்படும் கடன் சுலபமான தவணை முறையில் திருப்பி வசூலிக்கப்படும்."

# இந்தியைப் பரப்பும் சங்கங்களுக்கிடையே சண்டை!

## தீர்த்துவைக்க டில்லி அரசிடம் கோரிக்கை

இந்தியர்களிடையே இதய ஒற்றுமையைத் தோற்றுவிக்கவேண்டும் என்ற நோக்குடனேயே, காந்தியார் இந்தி இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

ஆனால், இன்று, இந்தியைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டுள்ள இரண்டு அமைப்புகளே --- அலகாபாத்திலுள்ள இந்தி சாகித்திய சம்மேளனமும், வார்தாவிலுள்ள இராஷ்டிரபாஷா பிரச்சார சமிதியும்-- ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக்கொண்டு, நீதிமன்றம் வரை சென்றுள்ளன.

"காந்தியார் நூற்றாண்டின் போது, இம்மாதிரியான சண்டை கெட்ட பெயரை உண்டாக்குவதாக இருக்கிறது; மத்திய அரசு தலையிட்டு, இந்தச் சண்டையைத் தீர்த்துவைக்க வேண்டும்"

என்று இராஷ்டிரபாஷா பிரச்சார சமிதியின் வங்க மாநிலக் கிளையின் தலைவர் டாக்டர் சுனீதிகுமார் சட்டர்ஜி, ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

## அறிவு வளர்ச்சிக்கு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதே இடத்தில் இருப்பதால் பலருடைய கவனத்தையும் ஈர்த்து மனத்தைக் கெடுக்கக் கூடும்!

### நல்ல படம் வெளிவர வேண்டும்

எனவே, 'திரைப்படத்தில் வரும் காட்சியை அனுமதித்துவிட்டு, அதே காட்சியை மவுண்ட் ரோடில் விளம்பரமாக வைப்பதைத் தடுப்பானேன்?' என்று கேட்பதும் சரியல்ல!

'ஆபாசம் கூடாது' என்பதை படம் எடுப்பவர்களும், படம் பார்ப்பவர்களும் ஒப்புக்கொண்டு, நல்ல நோக்கத்துடன் படங்கள் வெளிவரத் துணைபுரிவார்களானால், மக்களுக்கு மிகுந்த நலம் பயக்கும்.

அப்படிப்பட்ட நல்ல படங்களை இப்படிப்பட்ட திரையரங்குகள் திரையிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

அருளப்பா தலைமைவகித்து நான் திறந்துவைத்த இந்தத் திரைப் பட அரங்குக்கு நல்ல அருளும் பொருளும் கிட்டும் என்று நம்புகிறேன்."

# இந்தி வெறியரின் குரல் மாறுகிறது!

## தென்னகத்தில் பலிக்காது என்பதை உணர்ந்து விட்டார்!

**"இந்தி, இந்த நாட்டில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி; எனவே, இந்தியா முழுவதிலுமிருந்தும் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தியை நுழைக்க வேண்டும்"**

என்று கூறிவந்த இந்தி வெறியர்கள், இப்போது, வடநாட்டின் பொது மொழியாக இந்தி இருக்கவேண்டும் என்று கூறத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தி வெறியர் சேட் கோவிந்ததாசு, வடநாட்டிலுள்ள தொழிலதிபர்களுக்கும், வாணிபர்களுக்கும் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில், 'இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், அரியானா, பஞ்சாப், இமாசலப் பிரதேசம், குசராத், மகாராட்டிரம், டில்லி ஆகிய பகுதிகளில் வாழும் வாணிபர்கள், தங்களுக்குள் கடிதப் போக்குவரத்தை இந்தியிலேயே நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்!

# அண்ணாவின் எண்ணம் பெற்றுவரும் வெற்றி

## ஆக்கப் பணிகளில் இளைஞர் சமுதாயத்தின் சாதனைகள்

## எதிர்காலத்தில் நிறைவேறவிருக்கும் எண்ணற்ற திட்டங்கள்

### தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கும் சீரணி -- அதிகாரி பெருமிதம்

சென்னை, நவ. 14—

"சென்னைக் கடற்கரையில் அடிக்கடி பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன; அதற்காக அரசியல் கட்சிகள், அவ்வப்போது மேடை அமைக்க வேண்டியிருக்கிறது; எனவே கடற்கரையில் மிகப் பெரிதான — நிரந்தரமான மேடை ஒன்று கட்டித் தருவதற்குச் சீரணியினர் முடிவு செய்திருக்கின்றனர்"

என்று, சீரணி அதிகாரி பரமசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்; மேலும் அவர் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:--

**எதிர்காலத் திட்டங்கள்**

காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழகத்தி லுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் --- ஒன்றியத்துக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் --- 374 பள்ளிக்கூடங்களைச் சீரணியினர் கட்டி முடிப்பர்.

சென்னை நகரில் 60 இடங்களில் முதியோர் கல்வி நிலயம் கட்டப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**திட்டம் வெற்றியடைந்தால்...**

சென்னை நகரில் 300 சீரணியினருக்குத் தீயணைப்பு -- முதல் உதவிப் பயிற்சி அளிக்கப்படும்; கிழமைக்கு இரண்டு நாள் வீதம் ஒரு திங்களுக்கு இந்தப் பயிற்சி தரப்படும்; இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், தமிழகம் முழுவதிலும் இது விரிவுபடுத்தப் படும்.

**சீரணியினரின் சாதனைகள்**

சீரணியினர் கடந்த 15 மாத காலத்தில், ரூ. 26 இலட்சம் மதிப்புள்ள பணிகளைச் செய்திருக்கின்றனர்.

இதுவரையில் 200 பள்ளிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன; 200 இணைப்புச் சாலைகள் போடப்பட்டன; 300 கால்வாய்கள் வெட்டப்பட்டன --- பழுதுபார்க்கப்பட்டன.

8,000 பள்ளிக்கூடங்களுக்கு வெள்ளையடித்தனர்.

5,011 பள்ளிகளில் திருக்குறள் எழுதப்பட்டன.

**ஓர் கண்ணோட்டம்**

1967 ஜுன் 17 அன்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் சீரணி அமைக்கும் திட்டத்தை அறிவிக்கையில், இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

1967 ஆகஸ்டு 16-ம் நாளன்று சீரணித் தொடக்க விழா நடைபெற்றது.

சீரணி ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பண்டைத் தமிழகப் பண்பாட்டின் அடிப்படையில் ஊர் -- கூற்றம் -- கோட்டம் -- மண்டலம் -- நாடு என்ற அடிப்படையில் இப்படை அமைக்கப்பட்டது.

ஊருக்கு—ஒன்றிரண்டு உறுப்பினர்கள்; கூற்றத்திற்கு — 40 முதல் 50; கோட்டத்திற்கு— 200 முதல் 250; மண்டலத்திற்கு —1000-க்குமேல்; நாட்டிற்கு— 15,000-க்கு மேல் என உறுப்பினர்கள் இருக்கலாம்.

**பத்துக் கட்டளைகள்**

சீரணியினர் நோக்கம் மற்றும் குறிக்கோளாகப் பத்து அம்சங்கள் வரையறுக்கப்பட்டன:—

1. ஊதியமின்றி ஓய்வுநேரப் பணி புரிதல்.
2. தன்னலம் கருதாது பொது நலப் பணிபுரிதல்.
3. தன்னம்பிக்கை, சுயமரியாதையை வளர்ச்சியடையச் செய்தல்.
4. உழவு, தொழில் வளர்ச்சிக்கு உதவுதல்.
5. கல்வி, பொது அறிவு வளரத் தூண்டுதல்.
6. பொதுச் சுகாதாரப் பணி ஏற்றல்.
7. தீண்டாமையை ஒழித்தல்.
8. அன்பு, சகிப்புத்தன்மை மூலம் சமூகக் கேடுகளை அகற்றுதல்.
9. ஆதரவற்றவர்க்கு ஆதரவு தருதல்.
10. என்றும் -- எதையும் நல்ல வழியிலேயே செய்தல்.

இந்தப் பத்துக் கட்டளைகளுடன் பொறுப்பேற்ற சீரணிக்குப் பெரும் பணி காத்திருந்ததில் வியப்பேதுமில்லை.

**பெரும் பணியில் சில**

21 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சேரலாம் என்ற அறிவிப்பின் கீழ்த் தொடங்கப்பட்ட இப்பணிக்குப் பெரும் படை சேர்ந்தது.

இப்போது 30,200 பேர்களைக் கொண்டதாக விளங்கும் சீரணி பொது மக்கள் கூறும் திட்டங்களை மட்டுமன்றித் தாங்களே மக்கள் தேவைகளை அறிந்தும் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து விவாதித்து வேலை செய்கின்றது. தொடங்கியது.

பெரிய திட்டங்களாக இருந்தவை மண்டல அளவிலும், சிறிய--நடுத்தரத் திட்டங்கள் கூற்றம், கோட்டம் ஊர், அளவிலும் ஏற்று நடத்தப்பட்டன.

குளங்களைப் புதுப்பித்தல், கால்வாய் வெட்டுதல், அணை கட்டுதல், தரிசு நிலங்களைப் பயனுள்ளதாக்குதல், வரப்புக் கட்டுதல், இணைப்புச் சாலைகள் போடுதல், காய்கறித் தோட்டம் போடுதல், பூச்சி மருந்து தெளித்தல், பழம் தரும் மரங்களை நடுதல், சேரிகளைச் சுத்தம் செய்தல் போன்றவை சீரணி ஏற்ற பெரும் பணிகளில் சிலவாகும்.

தன்னலமற்ற குறிக்கோள், பொதுநலப் பணிபுரியும் ஆர்வத்தை மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற புனித நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்ட இத்திட்டத்திற்கு மக்களிடம் -- குறிப்பாக இளைஞர் சமுதாயத்திடமிருந்து கிடைத்துள்ள வரவேற்பு, இத்திட்டத்தைத் தொடங்கிய தமிழக அரசுக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது; இந்த ஆர்வத்தையும், துடிப்பையும் என்றும் நிலைநாட்டுவிதத்தில் காப்பதே சீரணியினரின் தற்போதைய குறிக்கோளாகும்.

தமிழகம் முழுவதுமே சீரணியின் பணி சிறப்புமிக்கதாகும் என்றாலும், தஞ்சை மாவட்டத்தில் அதி அற்புதமான வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. அரசுத் துறை எதுவுமே, 'எங்களுடையதல்ல' என்று கைவிட்ட பல கால்வாய்களைச் சீரணி செம்மைப்படுத்தியிருக்கிறது.

ஓராண்டுக்காலத்தில் முடியக் கூடிய ஒரு பணியைச் சீரணியினர், 64 நாட்களில் செய்திருக்கின்றனர்.

சீரணியின் பெருமைகளில் ஒன்றாக உலகத் தமிழ் மாநாட்டினை ஒழுங்குபடுத்தியதை அதிகாரி குறிப்பிட்டார்.

சீரணியின் சீரிய செயல்பற்றி இதுவரை எவரும் எவ்விதப் புகாரும் கூறவில்லை என்றும், எவரும் குறை தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

சென்ற ஆண்டு சீரணிக்காக ஒதுக்கப்பட்ட ரூ 10-இலட்சம் செலவிடப்பட்டுவிட்டதாகவும், மக்களிடையே அதிலும் சிறப்பாக வருங்காலத் தலைமுறையினராக இன்றைய இளைஞர் சமுதாயத்தில் பொதுநலத் தொண்டு உணர்வு பரவுகிறது; அதுவே போதும் என்று தாமும், தமிழக முதலமைச்சரும் நம்புவதாகவும் தெரிவித்தார்; 'இந்த நம்பிக்கை வீணபோகாது என்று கருதுவோமாக' என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

**சிறுவர் அரங்கம்**

நவ. 15, 17-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'தபால்காரர்'

(முழு நீளச் சிறப்புப் படம்)

நவ. 16-ல் திரைப்படக் காட்சி இல்லை

---

## திருச்சி மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"திருச்சி மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், 17—11—68 மாலை 3 மணிக்கு திருச்சி நகர மன்றச் சத்திரத்தில் நடைபெறும்; அதுபோது அண்ணா பிறந்த நாள் விழா வரவு – செலவுக் கணக்கு, கழக ஆக்க வேலைகள், மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் ஆய்வுக்கு வரும்; மாவட்டப் பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

## நீலகிரி மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"நீலகிரி மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம், 17—11—68 காலை 11 மணிக்கு உதகை எட்டின்ஸ் ரோடில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும்; அதுபோது நகராட்சித் தேர்தல் குறித்தும், கோவை -- நீலகிரி மாவட்ட எல்லைகள் குறித்தும் விவாதிக்கப்படும்; மாவட்ட உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, மாவட்டச் செயலாளர் கே. பி. முருகேசன் அறிவிக்கிறார்.

## குழுக் கூட்டம்

"ஆலந்தூர் பெருநகர தி. மு. க. கிளையின் செயற்குழு, பொது பொது உறுப்பினர்கள் -- கழக முக்கியத் தோழர்கள் கலந்துகொள்ளும் கூட்டம், 16—11—68 பிற்பகல் 2 மணிக்கு இந்துமத பாடசாலையில் நடைபெறும்; மாவட்டச் செயலாளர் கே. டி எஸ். மணி, மாவட்டத் துணைச் செயலாளர் அகிலன், சைதை வட்டச் செயலாளர் நல்லதம்பி ஆகியோரும் கலந்துகொள்வார்கள்" என்று நகரச் செயலாளர் ம. ஆபிரகாம் அறிவிக்கிறார்.

---

## சேலம் மாவட்ட தி.மு.க. தேர்தல்

சேலம் மாவட்டத் தி. மு. கழகத் தேர்தல் 16—11—68 காலை 10 மணிக்கு சேலம் நகர் விசயராகவாச்சாரியார் திடலில் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

# இந்திரா பேச முடியாமல் திணறல்

## விவாதத்துக்குப் பதிலளிக்காமலே வாக்கெடுப்பு

### இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் புதுமை!

புதுடில்லி, நவ. 13—

இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக, தலைமையமைச்சர் பதிலளித்துப் பேசாமலேயே அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துன்மீது வாக்கெடுப்பு நடைபெற்றிருக்கிறது.

இந்திரா காந்தி அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்ற மக்களவையில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது.

இன்று விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி எழுந்ததுமே, அவரைப் பேசவிடாமல் ச. சோ. கட்சி உறுப்பினர்களும், கம்யூனிஸ்டு உறுப்பினர்களும் தடுத்தனர்.

அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள்மீது அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகக் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் குரல எழுப்பினர்.

'வழக்குகளைத் திரும்பப் பெறுக; வேலை நீக்கத்தை ரத்து செய்க' என்பன போன்ற முழக்கங்களை எழுப்பினர்.

அவையில் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டுத் தொடர்ந்து நீடித்தது.

அவைத் தலைவர் பலமுறை வேண்டுகோள் கொடுத்தும் அமைதி ஏற்படவில்லை.

இதன் விளைவாகத் தலைமை அமைச்சர் இந்திரா பேசவே முடியாத நிலை ஏற்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது; எதிராக 220 வாக்குகளும், ஆதரவாக 85 வாக்குகளும் பதிவாயின; சுதந்தராக் கட்சி உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இன்றைய கேள்வி நேரத்துக்குப் பின் தலைமையமைச்சர் பேச எழுந்தவுடனேயே இந்த அமளி துவங்கியது. அவர் தம் பேச்சைத் துவக்கும்போது, முந்திய நாள் உள்துறை அமைச்சர் திரு. சவாண் கூறியதையே தான் தாமும் கூறப்போவதாகக் கூறினார்; இதைக் கேட்டதும் எதிர்க் கட்சியினர் ஆத்திரமடைந்தனர்.

"வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் நிலை பற்றி எதுவும் கூறப்போவதில்லை என்றால் தலைமையமைச்சரின் பேச்சைக் கேட்க நாங்கள் தயாராக இல்லை" என்று எதிர்க் கட்சியினர் கூறினர்.

"ஊழியர் எவரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் வேலை நீக்கம் பெற்ற அனைவரும் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் தலைமையமைச்சர் நேரடியான உறுதிமொழி வழங்கவேண்டும்" என்றும் ச. சோ. கட்சித் தலைவர் ரபிரேய் கூறினார்.

"சவானின் பேச்சை நேற்றே கேட்டிருக்கிறோம்; அதையே திரும்பத் தலைமை அமைச்சரும் பேசுவாரானால், அதைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இல்லை" என்றும் அவர் கூறினர்.

தலைமையமைச்சரின் உரையைக் கேட்கும்படியும், அவர் பேச்சில் திருப்தி ஏற்படவில்லையென்றால், பேசி முடித்ததும் கேள்விகள் கேட்க வாய்ப்பளிப்பதாகவும் உறுப்பினர்களை அவைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. உமாநாத் எழுந்து, 'வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் நிலைபற்றி முதலில் தலைமையமைச்சர் உறுதிமொழி வழங்கட்டும்' என்றார்.

'தலைமையமைச்சர் என்ன செய்யவேண்டும் என்று என்னால் கூறமுடியாது' என்று அவைத் தலைவர் கூறினர்.

தொடர்ந்து எதிர்ப்புக் குரல்கள் எழுந்துகொண்டேயிருந்தன; பிறகு ஏதும் செய்வதறியாது ஒரு பார்வையாளரைப்போல அவைத்தலைவரும் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்; தலைமையமைச்சரும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சற்று அமைதி ஏற்பட்டவுடன் தொடர்ந்து பேசுமாறு இந்திரா காந்தியை அவைத் தலைவர் கேட்டுக்கொண்டார்; அவர் பேச எழுந்து, நடந்த அமளியைச் சில வார்த்தைகள் சொன்னதும், மீண்டும் அமளி தொடர்ந்து; சில உறுப்பினர்கள் மேலும் கொதிப்படைந்தனர்.

மீண்டும் மீண்டும் அவைத் தலைவர் வேண்டுகோள் விடுத்தும் அமைதி ஏற்படவில்லை.

'தலைமையமைச்சர் உறுதிமொழியளிக்க வேண்டும்' என்று மீண்டும் வற்புறுத்தப்பட்டது.

இரா. செழியன் (தி.மு.க), ஏ. கே. கோபாலன் (இடது கம்யூனிஸ்டு), எஸ். எம். திவிவேதி (பி சோ.) ஆகியோர், 'தலைமையமைச்சர் உரை நிகழ்த்துவதற்குப் பதிலாக, விவாதத்தின்போது எழுப்பப்பட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு மட்டும் பதிலளிக்க வேண்டும்' என்று கோரினர்.

"இப்படி ஒரு குறிப்பிட்ட முறையில் பேசுமாறு பேசச் செய்வது சரியான முறையாகாது" என்று அவைத் தலைவர் கூறினர்.

தொடர்ந்து பல கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் தெரிவித்த கருத்துக்களை தலைமையமைச்சர் ஏற்பதாக இல்லை. அதன் விளைவாகத்தான் எதிர்ப்புக் குரல்களும் கூச்சல்களும் தொடர்ந்தன.

கடைசியில், தலைமையமைச்சர் உரை நிகழ்த்தாமலே தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

---

வேளாண்மைத்துறை அமைச்சர்

**ஏ. கோவிந்தசாமி**

சுற்றுப்பயணம்

நவ. 16: காலை 11 மணி: வால்பாறை—கால்நடை மருத்துவ மனைத் திறப்புவிழா.

நவ. 17: காலை 10-30 மணி: வால்பாறை—விவசாயக் கிடங்குத் திறப்பு விழா; மாலை 6 மணி: கோயமுத்தூர்—அரிசன மக்களுக்கு விவசாயக் கருவிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் பல கருவிகளும் வழங்குதல்; சலப்பு மணத் தம்பதிகளுக்கு தங்க மெடல் வழங்குதல்.

---

**ந. தமிழ்க்காவலன்**

நிகழ்ச்சிகள்

நவ 15: சிமோகா; 17: தேங்காய்த்திட்டு; 18: கருப்பூர். டிச. 16: கரூர்.

---

**முகவரி மாற்றம்:**

புலவர் வேங்கை மார்பன், 8, பழைய செஞ்சி சாலை, விழுப்புரம், (தெ. ஆ).

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.